பக்கங்கள்: ஆறு

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 12 வெள்ளிக்கிழமை [27-12-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 31

# ஐ.நாவின் கண்காணிப்புடன் யுத்த நிறுத்தம் அறிவிக்குக!

## தெற்கு தூதுக் குழுத் தலைவர் சோமா பெரேரா கோரிக்கை

கொழும்பு, டிசம்பர் 27

"வடக்கில் சர்வதேச அவதானிகளால் கண்காணிக்கப்படக்கூடிய யுத்த நிறுத்தம் ஒன்று பிரகடனப்படுத்தப்பட வேண்டும்."

யாழ். வந்து திரும்பிய தென்னிலங்கை நல்லெண்ணத் தூதுக் குழுவின் தலைவர் வண. பிதா சோமா பெரேரா இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

மனித உரிமைகள் இயக்கத் தலைவரும் இலங்கை பௌத்த திருச்சபையின் முன்னாள் தலைவருமான வண. பிதா சோமா பெரேரா கொழும்பில் ஆங்கில கார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு கோரியிருக்கிறார்: அவர் தெரிவித்திருப்பதாவது:-

வடபகுதியில் பொதுமக்கள் துன்பப்படுகின்றார்கள்; சர்வதேச அவதானிகளால்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தெற்கு தூதுக் குழுவுடன் பௌத்த குருமாரும் வருவர்

### வண. பிதா பெரேரா நம்பிக்கை

எனது அடுத்த யாழ். பயணத்தின்போது பௌத்த குருமார்களையும் அழைத்துச் செல்லலாம் என்ற நம்பிக்கையுடன் நான் இருக்கிறேன்.

— இவ்வாறு தெரிவித்தார் வண. பிதா சோமா பெரேரா.

அண்மையில் வடக்கிற்கு தாம் மேற்கொண்ட விஜயம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

சிங்கள - தமிழ் மக்கள் இடையே நல்லெண்ணப் பாலம் ஒன்றைக் கட்டும் முயற்சியில் நான் ஈடுபட்டுள்ளேன்.

எமது அணுகுமுறைகளை நாம் மாற்ற வேண்டும்; தெளிவான சிந்தனையுடன் யாழ்ப்பாணத்தின் யதார்த்த நிலைமையை நாம் பார்க்க வேண்டும்; — என்றும் அவர் சொன்னார். [உ-ன]

## அரசுக்கு வந்த ஆயுதங்களே ஹங்கேரியில் பிடிபட்டன!

### பாதுகாப்பு அமைச்சு ஊர்ஜிதம்

கொழும்பு, டிச. 27

சிலி நாட்டில் இருந்து ஸ்ரீலங்காவுக்குக் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்டவையும், ஹங்கேரி அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டவையுமான ஆயுதங்கள் அரசாங்கத்துக்கே கொண்டுவரப்பட்டவை என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன.

சிலியில் இருந்து கப்பலில் கொண்டுவரப்பட்ட ஆயுதங்கள் ஹங்கேரி அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட செய்தி வாசகர்கள் அறிந்ததே.

அவை ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு உரியவையே என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் ஒப்புக்கொண்டுள்ளன.

இது குறித்து அவ் வட்டாரங்கள் தகவல் தருகையில்— பாதுகாப்பு செலவினத்தைக் குறைக்கும் நோக்கத்துடன், மூன்றாம் உலக நாடொன்றிட

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நெடுங்குளம் பகுதி மக்கள் மடுவுக்கு இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், டிச. 27

வவுனியாப் பகுதி இராணுவத்தினர் தொடர்ந்து ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதால், நெடுங்குளம் மற்றும் சில கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மடுவுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

வவுனியா பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக, ஸ்ரீலங்காப் படையினர் வான் தாக்குதல்களையும், ஷெல் தாக்குதல்களையும் நடத்தி வருவதை அடுத்து மக்கள் இடம்பெயர்ந்து செல்லுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வான் தாக்குதல்கள் மற்றும் ஷெல் தாக்குதல்கள் காரணமாக அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பெருமளவில் பாதிப்படைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் தொண்டாவின் பேட்டி 5 ஆம் பக்கத்தில்

## பூநகரியில் ஊரடங்கு

கொழும்பு, டிச. 27

கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்படும் என்று கூட்டுப்படைகள் அலுவலகம் அறிவித்துள்ளது. [உ-ன]

## இந்து வாலிபர் சங்கத்தின் மணிவிழா

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் மணிவிழா இன்று தொடங்கும் மூன்று நாட்களுக்கு நடைபெறுகிறது.

முதலாம் நாள் நிகழ்ச்சிகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அங்காலை இவவர் தம் சுகிறவையளர் ... முதலில் இங்க ... [illegible]

## வவுனியாவில் மீண்டும் இராணுவ நடவடிக்கை

### ஆனால் ஊரடங்கு அறிவிப்புஇல்லை

கொழும்பு, டிச. 27

வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் 'பிளாக் ஸ்பொட்' என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருவதாக கூட்டுப்படைகள் அலுவலகம் அறிவித்திருக்கிறது.

ஆனால் வவுனியாப் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருப்பதாக அறிவிப்பு ஏதும் விடுக்கப்படவில்லை; ஏற்கனவே அமுலில் இருந்த ஊரடங்கு உத்தரவு கடந்த செவ்வாய்க்கிழமையுடன் நீக்கப்பட்டுவிட்டது தெரிந்ததே.

வவுனியாவில் இராணுவ நடவடிக்கை பூர்த்தியாகிவிட்டதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. [உ-ன]

## சூழல் சுகாதார வாரம்: 4ஆம் நாள்

## நகரில் பல இடங்களில் துப்புரவு வேலை தீவிரம்

யாழ்ப்பாணம், டிச. 27

சூழல் சுகாதார வாரத்தின் நான்காம் நாள் வேலைகள் நகரின் பல இடங்களிலும் தீவிரமாக நேற்று நடைபெற்றன.

நத்தார் பண்டிகை நாள் காரணமாக நேற்று முன்தினம் வேலைகள் இடம் பெறாத இடங்களில் நேற்று வேலைகள் இடம்பெற்றன. நல்லூர் கோவிலை அண்டிய பகுதியை யாழ் மாநகர சபை ஊழியர்கள் துப்புரவு செய்தனர்.

வட்டாரங்கள் தோறும் தொண்டர்கள் பொது மக்களது வீடுகளுக்குச் சென்று விழிப்புத் தரிகிப்பு பணியை மேற்கொண்டனர். சில இடங்களில் வீடுகளில் உள்ள கிணறுகளுக்கு இரவுவேளை குளோரின் இடப்பட்டது.

வீதிகளைத் துப்புரவு செய்யும் பணியில் ஆங்காங்கே சிறு சிறு குழுக்களாகத் தொண்டர்கள் ஈடுபட்ட போதிலும், மக்கள் அவர்களுக்கும் போதிய ஒத்துழைப்பு நல்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மக்களின் ஒத்துழைப்பு இல்லாதது குறித்து யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மடு அகதி முகாமில் தொற்றுநோய் பரவுகிறது

யாழ்ப்பாணம், டிச. 27

மடு அகதி முகாமில் தொற்று நோய்கள் தீவிரமாகப் பரவி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

மன்னார், வவுனியா, பூநகரிப் பகுதிகளைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு தற்பொழுது அகதிகளாகத் தங்கியுள்ளனர் என்பது தெரிந்ததே.

மழை நீர் தேங்கி நிற்பதாலும், ஏனைய காரணங்களாலும் மடு அகதிமுகாமில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகவும் —

அதனால் அகதிகள் மத்தியில் வயிற்றோட்டம், வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல், போன்ற நோய்கள் வேகமாகப் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவ வசதியும் போதாதுள்ளது என்றும் கூறப்படுகிறது. [ஓ]

## மன்னார் தமிழ் அகதிகள் கடத்தப்பட்டு கொலை!

யாழ்ப்பாணம், டிச. 27

மன்னார் தீவில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் தமிழர்கள் கடத்தப்பட்டு, கொலை செய்யப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரு வாரங்களில் ஐந்து தமிழர்கள் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மன்னார் தீவிலுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தூண்டுதலின் பேரில் சமூக விரோதக் குழு ஒன்று இந்தக் கொலைகளைச் செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பன்டெம் (Bantam) முட்டைகளும், (ரூ 20/-) ஒரு சோடி கோழியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் கிவி படப்பிடிப்பாளர்கள், 131/1, அம்பலவாணர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (19190)

## மணமகன் தேவை

இந்து சமய பட்டதாரி ஆசிரியைக்கு (வயது 34) பொறியியலாளர், கணக்காளர் மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு: எஸ். பரமேஸ்வரி, 122, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி தெற்கு. (19160)

## பழைய புத்தகங்கள்

புத்தகங்கள், சஞ்சிகைகள் பத்திரிகைகள் நியாய விலையில் கொள்முதல் செய்ய நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கடை. பழைய புத்தகக் கடை, 32, அருச்சுனா (ஸ்ரான்லி) வீதி. (19175)

## இலவச திருமண சேவை

40 வயது அரச தொழில் புரியும் சைவ வரனுக்கும், 36 வயது இலங்கை வங்கி சைவ வரனுக்கும் மணமகள் தேவை. சேவையை நாடுபவர்கள் ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து. விமலா 958/8, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (4454)

## சோதிடம்

இன்று தொடக்கம் எமது மானவ விநாயகர் சோதிட நிலையம் 96, கோவில் வீதி (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர், யாழ்ப்பாணம். என்ற முகவரியில் இயங்கும். ஸ்ரீ சத்தி கணேச உபாசகர் ஸ்ரீ மானவ விநாயகர் சோதிட நிலையம், நல்லூர். (19181)

## கலண்டர் நாட்குறிப்பு

ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர் 1992 இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கக் குறிப்புகளின்படி எல்லா விடயங்களும் அடங்கியது. விலை ரூபா 36/- ஆனந்தா நாட்குறிப்பு பெரிய அளவில் இரண்டு நாட்களுக்கு ஒரு பக்கம். ரூபா 80/-. இப்பொழுது விற்பனையாகிறது. எங்கும் கிடைக்கும். வெளியீடு: ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி/1224)

## வள அணி ஆசிரியர் பயிற்சிக் கருத்தரங்கு

வள அணி ஆசிரியர் பயிற்சிக் கருத்தரங்கு நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது. விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத் தலைமைச் செயலகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கள் வரை இந்தக் கருத்தரங்கு தொடர்ந்து நடைபெறும். (இ-5)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச 27

யாழ் பல்கலைக்கழகத்தின் தொழிலாளர் கல்விக் கழகம் ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு பல்கலைக்கழக புவியியல் மண்டபத்தில் நடைபெறும். இக் கருத்தரங்கில் "கல்வி நடைமுறைகளும் அதற்கான தீர்வுகளும்" என்னும் தலைப்பில் வைத்திய கலாநிதி திருமதி சு. நவரத்தினம் கருத்துரை வழங்குவார். (த)

# இந்தியர் வருகையால் போராட்டம் எல்லைப் பகுதிவரைச் சென்றது

## மணலாறு வெளியீட்டு விழாவில் யோகி

யாழ்ப்பாணம், டிச 27

எமது மண்ணில் எல்லைப் பகுதிகளின் நாம் நிலை கொள்ளவும், எமது போராட்டத்தை நாம் எல்லைப் பகுதிகளுக்கு விஸ்தரிக்கவும் இந்திய படைகளுடனான யுத்தமே எமக்கு உதவியது.

"மணலாறு" நூல் வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்துகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் திரு. யோகரத்தினம் யோகி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'மணலாறு விஜயன்' எழுதிய இந்த நூலின் வெளியீட்டு விழா புதனன்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

திரு. யோகி இக் கூட்டத்தில் மேலும் பேசுகையில்–

"எமது மண்ணின் உண்மையான வரலாற்றைச் சொல்லித் தருகின்ற நூல்கள் மேலும் பல எம் மண்ணில் வெளிவரவேண்டும்.

"மணலாற்றுப் பகுதி மக்களின் போராட்ட வாழ்வை இங்குள்ள மக்கள் ஓரளவாவது புரிந்து கொள்ளாமல் இருப்பது கவலைக்குரியது என்றார்.

திரு. மு. திருநாவுக்கரசு சிறப்புரை ஆற்றுகையில்–

எமது மண்ணில் சிங்களக் குடியேற்றம் சம்பந்தமாக முழுமைபடுத்தப்பட்ட ஒரு வரலாற்று நூல் இதுவரை வெளிவரவில்லை. அந்த வகையில் "மணலாறு" நூல் வரலாற்றின் உண்மையான பதிவாக விளங்கும்' என்றார்.

பொருளியலாளர் திரு. வரதராஜன் பேசுகையில்–

"இந்தி - இலங்கை ஒப்பந்த காலத்தில் தான் மணலாற்றுப் பகுதி தீவிர சிங்களக் குடியேற்றத்துக்கு உட்படத் தொடங்கியது. மணலாறு மாவட்டத்தில் உள்ள சூரிய நாடு என்ற பகுதியில் 1985 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் எந்த ஒரு சிங்களவருமே இடம்பெறவில்லை. ஆனால் 1988 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் 3 ஆயிரத்து 239 சிங்களப் பெயர்கள் இடம்பெற்றிருந்தன என்றார்.

மணலாறு மாவட்ட முன்னாள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ரமேஷ் தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (இ-5)

## பொதுக்கூட்டம்

தென்மராட்சி, டிச 27

சாட்டிவேலி நாமகள் சனசமூக நிலையத்தின் 25 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிறு பிற்பகல் 3-00 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும். (இ-117)


28 - 12 - 1991 (சனி)

பி. ப. — 1-30 — 2-30

MORPHOLOGY

உருவவியல்

தாவரவியல்

ஐங்கரநேசனி

யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

(இ/1155)


## 12 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 1939-08-19

மறைவு: 1980-01-09

### அமரர் நடராசா பாலசுப்பிரமணியம்

(முன்னாள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளரும், சட்டத்தரணியும்)

அன்னாரது பன்னிரண்டாம் சிரார்த்த தினமான இன்று அஞ்சலி செலுத்தி ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

"பாலமனை" — அன்புப் பிள்ளைகள்

வேல்லணை மேற்கு,
வேலணை, — 6 (19201)

# 'சார்க்' நடத்தும் வாய்ப்பு பூட்டான் நிராகரித்தது!

கொழும்பு, டிச, 27

1992 சார்க் உச்சி மகாநாட்டை பூட்டானில் நடத்துவதற்கு சுழற்சி முறையில் கிடைத்த வாய்ப்பை அந்த நாட்டின் மன்னர் வேண்டாம் என்று நிராகரித்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

உச்சி மாநாட்டை நடத்துவதற்குத் தேவையான இடவசதிகள் அமது நாட்டில் இல்லை என்று பூட்டான் அரசு காரணம் கூறியது.

அதனைத் தொடர்ந்தே அடுத்த ஆண்டிற்கான உச்சி மாநாட்டை பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. (உ-எ)

# மரண அறிவித்தல்கள்

## கஸ்பார் றெஜினோல்ட்

குருநகரைச் சேர்ந்த பொன்னுத்துரை வில்சன் (கஸ்பார் றெஜினோல்ட்) பூநகரி - ஜெயபுரத்தில் 25-12-1991 புதன்கிழமை காலமானார்.

இவர் பொன்னுத்துரை - மரியரோசா (சமலம்) தம்பதிகளின் அருமைப் புதல்வரும், எலிசபெத்தம்மா, அந்தோனிப்பிள்ளை (நாஸன்), அருள்நாதன் (சுவிஸ்), ஜெயசீலன் (சுவிஸ்), யோண்பிண்டன் (சுவிஸ்), மேரிநாயகி (வசந்தா), லூர்த்துமேரி (ஜெனிதா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கலமுத்து பெரிமாலர் ஆகியோரின் மைத்துனரும், பரமலிங்கம் (பத்திரிகை செய்தியாளர்), வைத்திலிங்கம், நாகலிங்கம், தேவி, லூர்தம்மா, ராணி ஆகியோரின் மருமகனும், தங்கலட்சுமி (தேவி), நடராசா (பருத்தி துறை) ஆகியோரின் பெறாமகனும், நவாலியைச் சேர்ந்த தம்பிராசா, காலஞ்சென்ற பூமணி தம்பதிகளின் பேரனுமாவார்.

இவரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (27-12-91) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து யாழ். சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. பரமலிங்கம்

10/2, அடப்பன் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (சி/1165)

## திருமதி கண்மணி தில்லையம்பலம்

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தாமரை வீதி, ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி கண்மணி தில்லையம்பலம் காலமானார். இவர் காலம்சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-12-91 வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
இ. முத்துலிங்கம்

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (18988)

## ஆறுமுகம் முருகேசு

கல்வியங்காடு, நல்லூரைச் சேர்ந்த ஆறுமுகம் முருகேசு 26-12-91 (நேற்று) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சட்டத்தரணி ஆனைசுந்தரம் (முன்னாள் கோப்பாய் தேசியப் பேரவை உறுப்பினர்), ஞானசவுந்தரி ஆகியோரின் அருமைத் தந்தையும், யோகேஸ்வரி (லண்டன்) Dr. K. தங்கராஜா (அரசினர் வைத்தியசாலை, மாம்புரி, புத்தளம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லண்டனைச் சேர்ந்த வெற்றிச்செழியன், முருகுசெழியன், வெற்றிச்செல்வி ஸ்ரீராம் (J/St. Johns College), ஜெயராம் (J/Jaffna Hindu Primary School) ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 27-12-91 வெள்ளிக்கிழமை (இன்று) காலை 10.30 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr. K. தங்கராஜா
(மருமகன்)

335 ஆடியபாதவீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (19202)

## திருமதி இராசம்மா (இந்திராணி)

காரைநகர் சிதம்பரமூர்த்தி வேணியடியைச் சேர்ந்த திருமதி வீரசிங்கம் இராசம்மா (இந்திராணி) 26-12-91 (நேற்று) காலமானார். அன்னார் வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், இராசகுமாரியின் அன்புத் தாயாரும், சத்திவேல் அவர்களின் அன்பு மாமியாரும், தயாநிதி, மதிவதனா, சத்தியரூபன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-12-91 (இன்று) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் விளையாட்டு மைதான வீதி கல்வியங்காடு இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் செம்பாடு மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
சத்திவேல்
(மருமகன்)

(18982)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டுக்கோட்டையில் மணிவிழா

## ★ வாழ்த்துகின்றோம் ★

மணிவிழாக் காணும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் சமய, சமூகப் பணி மென்மேலும் தொடர எமது எம்பெருமானினதும், எம்பெருமாட்டியினதும் ஆசி கிடைப்பதாக.

வட்டுக்கோட்டை,
கண்ணகாம்பிகா சமேத
கண்ணலிங்கேஸ்வரர் ஆலய,
பரிபாலன சபையும், தொண்டர் சபையும்.

[19196]



## A/L 93

கலை, வர்த்தகம், விஞ்ஞானம்
புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 28-12-91 (சனி)

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

(சி/1157)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நடராஜா சந்திரராஜா
[போஸ்]
(குகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், தலைவல்லை)

தோற்றம்: 29 - 2 - 1948
மறைவு: 19 - 12 - 1989

திதி: 27 - 12 - 1991

எம் அன்பின் அருயிர் அப்பாவே! அன்பின் திருவுருவாய், கொடையில் வள்ளலாய், வாழ்க்கையின் கலங்கரை விளக்கமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் சென்றுவரும் வழிகளெல்லாம் வழிமேல் விழி வைத்து காத்திருப்போமே. அப்பா, நீங்கள் வரும் வழிதான் மறந்து சென்றீர்களோ. நீங்கள் மறைந்து ஈராண்டு சென்றாலும் உங்கள் போஸ் என்னும் புனைப் பெயர் எந்நேரமும் எங்கள் செவிகளில் எதிரொலிக்கின்றன. உங்கள் நினைவுகள் நிழலாடுகின்ற எமது இருண்ட வாழ்க்கையில் உங்கள் நினைவுச் சுடர் என்றென்றும் ஒளி வீசி எம் முன் நிற்கின்றீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் அன்பைத் தேடி தினம் தினம் உங்கள் நினைவால் வாடும்!

மனைவி திருமதி எஸ். சந்திரராஜா,
பிள்ளைகள் தினேஷன்,
சிவஅனுஜா, நிஷாந்.

பலாலி வீதி,
கோண்டாவில்.

[19177]

## ஸ்ரீ சாரதாதேவி பிறந்த நாள் பூஜை

யாழ்ப்பாணம், டிச 27

அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 139 வது பிறந்த நாள் திதி பூஜை இன்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாசிரமத்தில் காலை 5.30 க்கு ஆரம்பமாகி நடைபெறும். [ந]

## பரீட்சை

நாடெங்கும் நடத்தப்பட்ட வனிஷ் தொழில்நுட்பப் பரீட்சை மன்னார் மாவட்டத்திலும் நடைபெற்றது.

கடந்த வாரம் நடைபெற்ற இந்த பரீட்சைக்கு மன்னாரில் 60 மாணவர்கள் தோற்றினர். (இ-3)

## சமய, சமூகப்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்கிணங்க, ஊரில் நடைபெறும் பொது வைபவங்கள், விழாக்கள் மட்டுமன்றி ஊரவரின் மங்கள நிகழ்வுகள், மரணச்சடங்குகளிலும், சைவநெறி தழைத்தோங்க சங்க உறுப்பினர்கள் தமது கடமையை ஆற்றுகின்றனர். கலை கலாசார பண்பாட்டு வளர்ச்சிக்காக கலை நிகழ்வுகள், கருத்தரங்குகள் நுண்கலை வகுப்புகள் ஆகியவையும் நடத்தப்பட்டு வருகின்றன.

இச் சங்கமானது, விளையாட்டுத் துறையிலும் களம் பல கண்டு, வெற்றியோடு, வெற்றிக் கேடயங்களையும் தட்டிக் கொண்டது. அத்தோடன்றி விளையாட்டுப் போட்டிகளை நடத்தி, வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மணிவிழாவின் போது "செந்தமிழோடுயர் சைவமும் வாழ்ந்திட ஜெகமிதில் உழைத்திடுவோம்" எனும் கூற்றிற்கிணங்க வட்டுக்கோட்டையில் சமய, சமூக வளர்ச்சிக்கு உழைத்த, உழைக்கின்ற உத்தமர்களுக்கு, இந்து வாலிபர் சங்கம் சிறப்புக் கௌரவம் அளிக்கிறது. அதனோடு இயல், இசை, நாடக நிகழ்வுகளையும் சமர்ப்பித்து நிற்பது, இளைஞர்களை மட்டுமே அங்கத்தவர்களாகக் கொண்டு அனுபவங்களினூடாக நடத்தி வளர்ந்துவரும் வட்டு இந்து வாலிபர் சங்கமாகும். இச் சங்கமானது மேன்மேலும் வளர்ச்சியுற்று, தொடர்ந்தும் பணியாற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவன் தாள் பணிவோமாக.

தொகுப்பு:
இ. ஜெயக்குமார்.

## இந்து வாலிபர் சங்க நிர்வாகிகள்

தலைவர்:
திரு. ந. சபாரத்தினசிங்கி
உபதலைவர்:
திரு. இ. ஜெயக்குமார்
செயலாளர்:
திரு. தி. சிவக்குமார்
பொருளாளர்:
திரு. க. சேதீசன்
உப செயலாளர்:
திரு. மா. கிருபானந்தன்

நிர்வாக உறுப்பினர்கள்
திரு. ம. புஸ்பவண்ணன்
கு. சுபேந்திரன்
வை. மகேஸ்வரன்
ச. லோகேஸ்வரன்
க. மணிவண்ணன்
கு. ஜெயந்திரன்
மா. ரமேஸ்
ச. சந்திரகுமாரன்
த. முருகதாஸ்
செல்வன் செ. பரமேந்திரா

சிறுவர் பகுதி நிர்வாகிகள்:

தலைவர்:
பா. சுதா
செயலாளர்:
[illegible]
[illegible]
து. சாந்தினி


## நிகழ்ச்சி இடமாற்ற அறிவித்தலும் நன்றி நவிலலும்

வேலணைக் கல்விக் கோட்டம், வசதி குறைந்த மாணவர்களின் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிதிக்காக அளிக்கும்

## மாபெரும் கலை விழா

யாழ் இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில்
28 - 12 - 1991 காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

(முன்பு அறிவிக்கப்பட்டது போல ஸ்ரீதர் தியேட்டரில் நடைபெறமாட்டாது)

★ நிதி உதவி புரிந்து ஆதரவளித்தவர்கள் அனைவருக்கும் அன்புகலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

சி. புலேந்திரன்,
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

[19198]



## பயிலுனர் ஆசிரியர் சேவை

A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
வடக்கு - கிழக்கில் அதிக வெற்றிடங்கள்

### போட்டிப் பரீட்சைக்கான விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 28-12-91 மு.ப. 9 மணி

பாடநெறி:-
1. பொது உளச்சார்பு 2. பொது அறிவு

தகைமைகள்:- 18 — 35 வயதிற்கு இடைப்பட்ட க. பொ. த. உ/த பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி.

விண்ணப்ப முடிவு திகதி: 06 - 01 - 1992

விண்ணப்பப் படிவங்களையும் விவரத் திரட்டினையும் நேரில் பெறலாம்.

★ இலவச பாடக் குறிப்புகள்
★ விரிவுரைகள் - சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
★ கட்டணம் ரூபா 290 00 (முழுப் பயிற்சிக்கும்)

## அஸ்ரன் கல்வி நிலையம்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[இ-1082]


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 26 — 09 — 1919
மறைவு: 27 — 11 — 1990

### திருமதி சின்னம்மா தாமோதரம்பிள்ளை

கண்ணை இமை காப்பது போல்
எம்மை வண்ணமுறக் காத்து வந்தீர்
சாலமெல்லாம் உம் நிழலிருக்க
காலனுக்கும் தான் பொறுக்கவில்லை
கழிந்து விட்டது ஓராண்டு ஆயினும்
எம் கண்ணீர் வெள்ளம் குறையவில்லை
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"லக்ஷ்மி"
தம்மனை,
அனலைதீவு.

[19088]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து வாலிபர் சங்கம், வட்டுக்கோட்டை

## (1931) ★ மணிவிழா சிறப்புமலர் ★ (1991)

## பணி ஓங்கி உயர்ந்திடுக

மணிவிழாக் காணும் வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் கடந்த காலப் பயனுள்ள பணிகளை வாழ்த்துவதோடு எதிர்காலப் பணிகளையும் சிறப்பாக ஆற்றுவதற்கு அம்பாள் ஆசியை வேண்டி நிற்கின்றேன். இளைஞர்களின் எழுச்சியான நற்பணிகளினால் வீடும், நாடும் நலமடையும் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தாகும்.

ஆத்மீகப் பணியிலும், அறப் பணியிலும் முன்னின்று உழைத்து வரும் இம்மன்றத்தினர் அறுபதாண்டு நிறைவைக் கண்டது பெருமகிழ்ச்சிக்குரிய சம்பவமாகும். மேலும் மேலும் இவர்களின் தன்னலம் கருதாப் பணி ஓங்கி உயர்ந்து சமூக மேம்பாட்டிற்கும், சைவ எழுச்சிக்கும் உதவ வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.

## ஆசியுரை

மணிவிழாக் காணும் இந்து வாலிபர் சங்கம் என்றும் இளமையோடும், பணியில் வாலிபத்துடனும் சிந்தனை ஆற்றலில் முதுமை நிறைவுடனும் மிளிர்ந்து சிவத்தமிழ் பரவிட இறைவனை பிரார்த்திக்கிறோம்.

கடம்

முத்தமிழ்க் குருமணி, கிரியாக்கிரமஜோதி,
வசீகர வாருதி, சகலாகமசங்காரர்
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
ஸ்ரீ திரமலைச் சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம்.

# சமய, சமூகப் பணிகளுக்கு
# 60 ஆண்டுகளாக அர்ப்பணம்

மணிவிழா மாண்பு கண்டிடும் புறம் வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கம் செந்நெல் வயல் வளமும், செழிப்பான நீர்வளமும், ஆலயங்களின் அருளாட்சியோடு அறிஞர் பலரையும் கொண்ட சூழலையும் உடைய வட்டுக்கோட்டையில் திகழ்கின்றது. இத்தகைய இனிமைச் சூழலில் 1931 ஆம் ஆண்டில் சட்டத்தரணி சு. நாகலிங்கம், வே. நாகலிங்கம், நீதிபதி க. கந்தசாமி ஆகியோரால் வித்திடப்பட்டு இன்று ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி 60 ஆண்டுகளைக் கடந்து 'மணிவிழா' எனும் பேரெண்டு கண்டு இன்புறுகின்றது.


தலைவர்

ஆரம்ப காலந்தொட்டு இச்சங்கமானது ஆலயங்களில் உயிர்ப்பலியைத் தடுத்து, சீர்திருத்தங்களை நிலைநிறுத்தி 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற குறிக்கோளை மையமாகக் கொண்டு சமயப் பணியுடன் சமூக சேவையையும் ஆற்றி வருகின்றது. அதன் வழியில் பேருந்துத் தரிப்பு நிலையம், இலவசக் கல்வி, ஆலய விழாக்களில் தாகசாந்தி நிலையம் இலவச முதலுதவி வகுப்புகள், முதலுதவி நிலையம் வேதாபீடம், ஆலய விசேட தினங்களில்


செயலாளர்

பங்குபற்றி தொண்டுகள் ஆற்றுகை போன்ற அரும் பணிகளில் ஈடுபட்டுவருகிறது.

எமது கிராமத்தில் சமயக் கல்வியோடு சமுதாயக் கல்வியையும் வளர்த்து வரும் நோக்கோடு வட்டு. திருஞான சம்பந்த வித்தியாசாலையில் சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. அதற்கும் மேலாக பாடசாலையின் கலை வளர்ச்சிக்கென கலை நிழ்வரங்கம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அத்தோடு துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையமும் உருவாக்கிக் கொடுக்கப்பட்டது. சிறுவர் கல்வியை ஊக்குவிப்பதற்காக சிறுவர் நூல் நிலையம் ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது. உடல், உள அபிவிருத்திக்காக பாடசாலையில் வருடந்தோறும் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டிகளின் போது சங்கத்தின் மறைந்த அங்கத்தவர்களின் ஞாபகார்த்தமாக வெற்றிக்கேடயங்கள் பரிசாக வழங்கப்பட்டு வருகின்றன.

எமது சங்க அங்கத்தவர்களின் உடல், உள அபிவிருத்தி கருதி விளையாட்டுப் பயிற்சி, போசாசனப் பயிற்சி என்பனவும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுக்கும் மேலாக "எம் கடன் பணி செய்து கிடப்பதே" என்ப

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வட்டூர் இந்து வாலிப சங்கமே, வாழி நீடு!

சைவமும் தமிழும் தழைத்திட்டோங்க
சால்புறு பணிகள் செய்வோர் வாழி
தெய்வத்திருத்தலங்கள் பல் தோறும்
திருப்பணிகள் புரிவோர் வாழி
பொய்யிலா நன்னெறி பற்றிநின்று
புண்ணியச் செயல்கள் புரிவோர்வாழி
வையகம் உயர்ந்திட நன்னெறி காட்டும்
வட்டூர்இந்து வாலிப சங்கமே, வாழிநீடு!

சி. சபாநாதன்,
வட்டுக்கோட்டை.


"உழைப்பினால் உயர்ந்த மணிவிழா நாயகர்கள் வாழி"
ஞானம்ஸ் ஹாட்வெயர்ஸ் அன் எலெக்றிக்கல்ஸ்
சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டை.

"மணி விழா சிறப்புடன் நிறைவடைக"
அனுபவம் மிக்க ஆசிரியர்களின் திறமையான
போதனைகளைப் பெற
சுப்றா கல்வி நிலையம்
சித்தன்கேணி.

" மணி விழா சிறப்படைய நல்லாசிகள் "
A/L கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகள்
ஆண்டு 11, 10, 9, 5ம் ஆண்டு ( புலமைப்பரிசில் )
வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.
பாரதி கல்வி நிலையம்
சித்தன்கேணி.

"மணிவிழா வாலிபர்கள் வாழியவே"
சேட்டிங்-சூட்டிங், றெடிமெட் ஆடைகள்,
கவுண், ரீசேட், சாறிவகைகளுக்கு
யோகாஸ் ஆடையகம்
யாழ்ப்பாணம்.

"வாழையடி வாழையாக வாழ்க"
★ பரிசுப் பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்களுக்கு
உங்கள் துணைவன்
வலம்புரி பல்பொருள் அகம்
ஆஸ்பத்திரி முன்பாக, வட்டுக்கோட்டை.

"இந்து வாலிபர்கள் நலம் பெறுக"
★ புகைப்படப்பிடிப்பிற்கும்
★ வீடியோ படப்பிடிப்பிற்கும்
மகத்துவம் வாய்ந்தது
சிவாஸ் ஸ்ருடியோ
பிரதான நிலையம், பண்டத்தரிப்பு. [சி-1164] கிளை நிறுவனம், வட்டுக்கோட்டை.

"உழைப்பால் உயர்ந்த வாலிபர்கள் வாழ்க"
★ லங்கம் ★
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

'இளைய தலைமுறையாம் இந்து வாலிபர் சங்கம் வாழி'
அனுசா சிகை அலங்கார நிலையம்
ஆஸ்பத்திரி அருகில்,
வட்டுக்கோட்டை.

'ஆண்டு தோறும் அரும்பணிகள் ஆற்றி வாழ்க'
★ நியூ மாஸ்ரர் இன்ஸ்ரிரியூட் ★
B M C ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

'சைவத்திற்கும் தமிழிற்கும் பணி செய்து வாழ்க'
★ பூபாலசிங்கம் புத்தகசாலை ★
யாழ்ப்பாணம்.

★ மணி விழா வாழ்த்துக்கள்
★ சிமாட்டி ★
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

'இந்து வாலிபர் சங்க மணிவிழா இனிதுறுக'
★ ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் ★
18A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

★ உறுதியுடன் இனிது வாழி ★
புதிய கல்வி நிலையம்
சங்கரத்தை வீதி, வட்டுக்கோட்டை.

"இந்து வாலிபர் சங்கம் வாழ்க"
கணேசன் ஸ்ரோர்ஸ்
K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

"மணிவிழா வாலிபர்களே தமிழுலகம் போற்ற வாழ்க"
★ காவேரி சில்க்ஸ் ★
48, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

"பணி செய்து பாரிபுகழ வாழ்க"
சிவகணேசன் ஸ்ரோர்ஸ்
41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

"மணிவிழா பொலிவுறுக"
★ ராசி சில்க்ஸ் ★
நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்

மணிவிழாக் காணும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திற்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்
இங்ஙனம்,
சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம்

"இந்து வாலிபர் சங்கத்தின் பணி வளர்க"
லீலா பேக் ஹவுஸ்
மார்க்கெட் சதுக்கம், சங்கானை.

"மணி விழா பொலிவு காணும் வாலிபர்கள் வாழி"
★ நியூ சயன்ஸ் அக்கடமி ★
எதிலம் முன்பாக, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

